**பதுளை பிரதேச சபை**

**பதுளை மாவட்டம்**

---

## 1. நிதிசார் கூற்றுக்கள்

### 1.1 நிதிசார் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2014 மார்ச் 31 ஆந் திகதியன்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2013 மார்ச் 27 ஆந் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 ஆகஸ்ட் 26 ஆந் திகதியன்று சபையின் தலைவருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட காணப்படும் விடயங்களால் நிதிசார் கூற்றுக்களில் ஏற்படும் தாக்கங்களைத் தவிர, 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான பதுளை பிரதேச சபையின் நிதிசார் நிலைமை மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிசார் செயற்பாடும் காசுப்பாய்ச்சலும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவதங்களுமைக்கமையத் தயாரிக்கப்பட்டு நிதிசார் கூற்றுக்களின் உண்மையானதும் நியாயபூர்வமானதுமான நிலைமையைத் தோற்றுவிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

சபையினால் மீளாய்வாண்டிற்கெனத் தயாரித்துச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்கள் இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கேற்பத் தயாரிக்கப்படவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) மீளாய்வாண்டிற்கெனப் பெறப்பட்ட காணி மாற்ற முத்திரைக் கட்டணம் ஆகிய ரூபா 2,153,789 மீளாய்வாண்டிற்கான வருவாய்த் தலைப்பிலிருந்து அகற்றப்பட்டு திரண்ட நிதியத்தில் செலவு வைக்கப்பட்டிருந்தது. ஆகவே, மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்களில் ரூபா 2,153,789 குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) சபை பெற்றுக்கொண்ட பட்டோலைகளின் பிரகாரம், 2009 ஜனவரி தொடக்கம் 2012 டிசெம்பர் வரையான காலப்பகுதிக்குரிய நீதிமன்றத் தண்டப் பணமாகிய ரூபா 5,623,011 மற்றும் 2012 ஒக்டோபர் தொடக்கம் டிசெம்பர் வரையான காலப்பகுதிக்குரிய முத்திரைக் கட்டணமாகிய ரூபா 326,280 என மொத்தமாக ரூபா

5,949,291 மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறப்பட வேண்டியிருந்தது. எவ்வாறாயினும், நீதிமன்றத் தண்டப் பணமாகவும் முத்திரைக் கட்டணமாகவும் வருவாய்க் கடன்பட்டோராக ரூபா 2,500,000 மாத்திரமே கணக்கிலிடப்பட்டிருந்தது. ஆகவே, வருவாய்க் கடன்பட்டோர் மற்றும் திரண்ட நிதிய மீதிகள் நிதிசார் கூற்றுக்களில் ரூபா 3,449,291 குறைவாகக் காட்டப்பட்டிருந்தன.

### 1.3.3 பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்யவேண்டிய கணக்குகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறான பெற வேண்டிய கணக்கு மீதி ரூபா 9,213,393 ஆகும். கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்கு மீதி ரூபா 6,613,497 ஆகும்.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றின்மை

உரித்துறுதிகள், ஒப்படைப்புக், கட்டளைகள், பொருட்கணிப்புச் சபை அறிக்கை என்பன சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 1,463,000 பெறுமதியான காணி மற்றும் கட்டிடங்களைக் கணக்காய்வில் திருப்திகரமாகச் சரி, பிழை பார்க்க முடியவில்லை.

### 1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| (அ) | பிரதேச சபைகள் விதி 217, 218 (நிதியும் நிர்வாகமும்) விதிகள் 1988 | சபைக்குரியதும் சபையால் பாவிக்கப்படுவதுமான சகல காணி, கட்டிடங்கள் என்பவற்றை ஆண்டிற்கொருமுறை கணிப்பிடுவதற்குத் தலைவர் நடவடிக்கை எடுக்கவில்லை. |
| (ஆ) | பிரதேச சபை விதி 180 (நிதியும் நிர்வாகமும்) - விதிகள் 1988 இலங்கை குடியரசின் 880 ஆம் இலக்க நிதிப் பிரமாணம் மற்றும் ஊவா மாகாண சபைத் தலைமைச் செயலாளரின் 2005 மார்ச் 24 ஆந் திகதிய 2/மு/1 ஆம் இலக்கக் கடிதம். | பிணை வைப்புச் செய்ய வேண்டிய 7 உத்தியோகத்தர்கள் அவ்வாறு செய்யவில்லை. |

| | |
|---|---|
| (இ) இலங்கை குடியரசின் தாபன விதிக் கோவையினது XXIV அத்தியாயத்தின் 1:6 மற்றும் 4 ஆம் பிரிவுகள் | சபையில் பணியாற்றி இடமாற்றம் பெற்றுச் சென்ற / ஓய்வுபெற்ற / சேவை நீங்கிய 10 ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 19,575 ஊழியர் கடன் அறவிடப்படாதிருந்தது. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம், 2013 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 741,348 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 678,400 ஆகும். இது நிதிசார் விளைவுகளில் ரூபா 62,948 அதிகரிப்பைச் சுட்டிக் காட்டுகின்றது.

### 2.2 பகுப்பாய்வுடனான நிதிசார் மீளாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்களில் ரூபா 62,948 தேறிய அதிகரிப்புக் காணப்பட்டது. இதன் பகுப்பாய்வு பின்வருமாறு.

| **மீண்டுவரும் வருவாய்** | **2013** | **2012** | **வேறுபாடு** | |
|---|---|---|---|---|
| | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | |
| தீர்வையும் வரியும் | 2,792,435 | 2,840,403 | (47,968) | |
| குத்தகை வாடகை | 438,412 | 2,016,795 | (1,578,383) | |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 264,280 | 252,115 | 12,165 | |
| சேவைக் கட்டணம் | 1,384,974 | 1,001,910 | 383,064 | |
| பிடிஆணைக் கட்டணமும் தண்டப்பணமும் | 2,507,537 | 2,698,586 | (191,049) | |
| ஏனைய வருவாய் | 643,913 | 491,878 | 152,035 | |
| வருவாய் உதவி | 11,474,755 | 10,663,819 | 810,936 | (459,200) |
| **மீண்டுவருஞ் செலவினம்** | | | | |
| சம்பளமும் படிகளும் | 14,167,946 | 13,551,899 | (616,047) | |
| பயணச் செலவினம் | 269,381 | 216,538 | (52,843) | |
| வழங்கலும் உபகரணமும் | 1,644,437 | 1,690,538 | 46,101 | |
| மூலதனச் சொத்துக்களைப் பழுதுபார்த்தலும் பராமரித்தலும் | 554,025 | 623,191 | 69,166 | |
| போக்குவரத்து, பாவனை மற்றும் ஏனைய சேவைகள் | 1,893,056 | 2,345,478 | 452,422 | |

| | | | | |
|---|---|---|---|---|
| வட்டி பங்கிலாபம், மிகையூதியக் கொடுப்பனவு | 34,962 | 13,638 | (21,324) | |
| உதவி, உதவு தொகை, உதவிப்பணம் | 186,703 | 830,991 | 644,288 | |
| ஓய்வூதியம், ஓய்வூதிய நலன் மற்றும் பணிக்கொடை | 14.448 | 14,833 | 385 | 522,148 |
| | | | ------------------ | ---------------- |
| | | | தேறிய அதிகரிப்பு | 62,948 |
| | | | | ======== |

## 2.3 வருவாய் நிர்வாகம்

### 2.3.1 வருவாய்ச் சேகரிப்புச் செயற்பாடு

மீளாய்வாண்டு ஆரம்பத்தில் நிலுவையை அறவிடுவதிலான முன்னேற்றம் 56 சதவீதமாகவும் ஆண்டின்போது விலைப்பட்டியல் சமர்ப்பிக்கப்பட்டு வருவாய் அறவிடப்பட்டிருந்தமை 62.5 சதவீதமாகவும் இருந்தது.

### 2.3.2 தீர்வையும் வரியும்

1987 ஆம் அண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 134(2) ஆம் பிரிவின் பிரகாரம், ஒவ்வொரு பிரதேசத்தினதும் அபிவிருத்தி மட்டத்திற்கேற்ப வரி வீதம் வெவ்வேறாக அமையலாம். எவ்வாறாயினும், சபை வரி அறவிடும் சகல அசையாச் சொத்துக்களிலும் 12 சதவீ வரி அறவிடப்பட்டிருந்தது.

### 2.3.3 நீதிமன்றத் தண்டப் பணமும் முத்திரைக் கட்டணமும்

மாகாண சபைத் தலைமைச் செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப் பணமாகவும் முத்திரைக் கட்டணமாகவும் ரூபா 2,500,000 வருமதியாக இருந்தது.

### 2.3.4 ஏனைய வருவாய்

பின்வருவன அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) சபையின் பிரதேசத்தில் 3 தொலத் தொடர்புக் கோபுரங்கள் நிறுவப்பட்டிருந்தன. ஆயினும், அவற்றை இயக்குவதற்கும் கட்டணத்தை அறவிடுவதற்குமான உப விதிகளை இயற்றச் சபை நடவடிக்கை எடுக்கவில்லை.

(ஆ) சபையால் இயக்கப்படும் உடவெல நீர் வழங்கல் திட்டத்தை தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்கு ஒப்படைக்கும் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம், சபைக்குச் சேர வேண்டிய பாவனையாளர்களின் ரூபா 604,382 நிலுவை தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புக்குச் செலுத்தப்பட்டுப் பின்னர் குறித்த

நிறுவனத்திடமிருந்து அது பெறப்பட வேண்டும். எனினும், அதற்கமைய அது அறவிடப்படாது சபையின் வருவாய் நிலுவையாக வருவாயின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(இ) 1988 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க மற்றும் 2000 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க அதிகாரச் சட்டங்களால் திருத்தப்பட்டவாறான 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச்சட்டத்தின் 23 ''அ''க்கமைய சுற்றாடல் அனுமதிப்பத்திரத்தைப் பெற வேண்டிய சபையின் அதிகாரத்துக்குட்பட்ட நடவடிக்கைகளை இனங்கண்டு கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஈ) உடன்படிக்கை எதுவுமின்றி பதுளை மாவட்டப் பொறியியலாளர் அலுவலகத்திற்கு சபையின் காணியில் ஒரு பகுதி மாதாந்தம் ரூபா 3,000 வாடகைக்கு 2008 ஜனவரி தொடக்கம் சபையின் தீர்மானப்படி வழங்கப்பட்டிருந்தது. அது முதலாக 2013 செப்டம்பர் வரை வருமதியாக இருந்த ரூபா 150,000 அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வில்லை.

## 3. கணக்களி தகைமையும் நல்லாளுகையும்

### 3.1 வரவு, செலவுத் திட்டக் கட்டுப்பாடு

சபைால் தயாரிக்கப்பட்ட மீளாய்வாண்டிற்கான வரவு செலவுத் திட்டத்திற்கும் உள்ளவாறான தரவுகளுக்குமிடையே அவதானிக்கப்பட்ட குறிப்பிடத்தக்க வேறுபாடுகளானது வரவு, செலவுத் திட்டம் ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிராமையைச் சுட்டிக்காட்டியது. விபரம் வருமாறு.

| மீண்டுவரும் வருவாய் | வரவு, செலவுத் திட்டமிடப்பட்டது | உள்ளவாறானது | வேறுபாடு | வேறுபாட்டினது சதவீதம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | |
| தீர்வையும் வரியும் | 779,908 | 2,792,434 | 2,012,526 | 258.0 |
| வாடகை | 514,737 | 438,412 | 76,325 | 14.8 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 216,000 | 264,280 | 48,280 | 22.3 |
| சேவைக் கட்டணம் | 1,657,000 | 1,384,974 | 272,026 | 16.4 |
| பிடிஆணைக் கட்டணமும் தண்டப்பணமும் | 7,012,000 | 2,507,537 | 4,504,463 | 64.2 |
| ஏனைய வருவாய் | 610,000 | 643,913 | 33,913 | 5.5 |
| வருவாய் உதவி | 11,118,000 | 11,474,755 | 356,755 | 3.2 |
| மூலதன உதவி | 51,500,00 | 6,819,233 | 44,680,767 | 86.7 |

**மீண்டுவருஞ் செலவினம்**

---

| | | | | |
|---|---|---|---|---|
| சம்பளமும் படியும் | 14,318,000 | 14,167,945 | 150,055 | 1.0 |
| பயணச் செலவினம் | 360,000 | 269,381 | 90,619 | 25.1 |
| வழங்கலும் உபகரணமும் | 1,615,000 | 1,644,437 | 29,437 | 18 |
| மூலதனச் சொத்துக்களைப் பழுதுபார்த்தலும் பராமரித்தலும் | 1,070,000 | 554,025 | 515,975 | 48.2 |
| போக்குவரத்தும் பாவனைச் சேவைகளும் | 3,473,000 | 1,893,056 | 1,579,944 | 45.4 |
| வட்டி, பங்கிலாபம், மிகையூதியக் கொடுப்பனவு | 10,000 | 34,961 | 24,961 | 249.6 |
| உதவி, உதவு தொகை, உதவிப் பணம் | 435,000 | 186,703 | 248,297 | 57.0 |
| ஓய்வூதியம், ஓய்வூதிய நலன்கள், பணிக்கொடை | 25,000 | 14,448 | 10,552 | 42.2 |
| மூலதனச் செலவினம் | 52,000,000 | 8,713,527 | 43,286,473 | 83.2 |

## 4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

---

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் சபையின் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) வரவு, செலவுத் திட்டக் கட்டுப்பாடு

(ஆ) வருவாய் நிர்வாகம்